27th September 1958]

SRI A. NESAMONY : May I know from the Hon. Minister when this question was sent to him and why no information is available up to the present moment?

THE HON. SRI P. KAKKAN : Now I have no information, Sir.

Waste of public funds

* *S.N.Q.* 27.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether fresh instructions have been issued to the officials of the Government to be careful regarding the waste of public funds as shown in the audit report on the Appropriation Accounts for 1956–57?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Accountant-General, Madras, compiles the audit report after completion of the audit of the accounts of the transactions of the various departments. If and when on audit of the accounts, serious irregularities, losses, etc., are brought to the notice of the Government, the Government issue stringent instructions to departmental officers to guard against such irregularities in future. Wherever necessary, disciplinary action is also taken against the officials responsible besides ordering recovery in full or in part, the monetary loss to Government. Based on the audit reports of previous years, suitable instructions have been issued in respect of the transactions of various departments.

The audit report for 1956–57 will be scrutinized by the Public Accounts Committee shortly and based on its recommendations, supplementary instructions wherever necessary will be issued.

SRI A. A. RASHEED : What is the total amount of loss that has been written off for the year 1956–57?

MR. SPEAKER : How can the Hon. Minister answer the question off-hand? 9-10 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : This has been scrutinized by the Public Accounts Committee. If the hon. Member takes the trouble of perusing the report of the Committee, he will find the answer there.

SRI A. GOVINDASAMY : இந்த ஆடிட் ரிப்போர்ட்டில் எவ்வளவு பணம் கையாளப்பட்டதாக அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்திருக்கின்றது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் முன்பு சொன்னதைப் போல, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி இதைப் பரிசீலனை செய்து இந்த சபைக்கு ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றது. அதிலே எல்லா விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

Kallaru Scheme

* 530 *Q.*—SRI T. VELUCHAMI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் "கல்லாறு" திட்டத்தின் எஸ்டிமேட் என்ன ?

[27th September 1958

(ஆ) இதை சர்க்கார் எப்போது நிறைவேற்றும் ?

(இ) இதனால் பயனடையக்கூடிய பிரதேசங்கள் எவை ? விஸ்தீரணம் எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The scheme has not yet been investigated in detail, hence the estimated cost has not been assessed.

(*b*) The detailed investigation will be taken up as soon as an agreement has been reached with the Kerala State for the diversion of the Kallar waters. The question of execution will arise only after the scheme has been sanctioned and funds provided.

(*c*) Does not arise in view of the first part of the answer to clause (*a*).

SRI T. VELUCHAMI : ஸார், தண்ணீர் திட்டங்களை நிறைவேற்றும் விஷயத்தில் மதுரை, கோயம்புத்தூர் ஜில்லாக்களுக்கு முதலிடம் கொடுத்து கவனிக்கப்படுகின்றன. திருநெல்வேலி ஜில்லா சரிவர கவனிக்கப்படவில்லை . .

MR. SPEAKER : எப்படித் தெரியும் ? பதிலில் ஒன்றும் இல்லையே. கேள்வி நேரத்தில் உங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லக் கூடாது, கேள்விதான் கேட்கவேண்டும். உங்கள் அபிப்பிராயத்தையெல்லாம் பட்ஜெட் விவாதத்திலே சொல்லவேண்டும்.

SRI T. VELUCHAMI : திருநெல்வேலி ஜில்லாவாசி ஒருவர் மந்திரியாக இல்லாத காரணத்தினால் தான் இம்மாதிரி . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் நான் சொன்னதைக் கேட்கவில்லை. இப்போது கேள்விதான் கேட்கவேண்டும். தனிப்பட்ட அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டாம். பட்ஜெட் விவாதத்தின்பொழுது சொல்லலாம். இன்னும் இதைப் பற்றிக் கேட்டால் கேள்வியை அவுட் ஆப் ஆர்டர் என்று சொல்லி விடுவேன்.

SRI T. VELUCHAMI : இந்தப் புகார் சரிதானா ? எந்தத் திட்டம் திருநெல்வேலி ஜில்லாவில் எந்த ஆண்டுக்குள் முதலில் எடுக்கப்படலாம் என்பதை மந்திரி அவர்கள் அறிவிப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினரைப் போல இன்னும் சில அங்கத்தினர்களும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகையால், அந்த அபிப்பிராயத்தைப் போக்க நான் முழு விவரத்தையும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கனம் அங்கத்தினர் சொன்ன கல்லாறு திட்டத்தை எடுப்பதைக் காட்டிலும், அதிகப்படியான ரூபாயையும், உழைப்பையும் போடுவதைக் காட்டிலும், கேரள சர்க்காரோடு நமது சர்க்கார் கலந்து பேசி, பெரிய திட்டங்களாகிய பரம்பிகுளத் திட்டம், அப்பர் பெரியார் திட்டம் போன்ற திட்டங்களை எடுத்துக் கொண்டால் ரொம்பவும் நன்மை உண்டாகும் என்று நினைக்கின்றது நமது சர்க்கார். அப்படி எடுத்துக் கொண்டால் கோயம்புத்தூர், மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய எல்லா ஜில்லாக்களுக்கும் நன்மை ஏற்படும்.

SRI D. S. AUTHIMOOLAM : இந்த கல்லாறு திட்டத்தில் மழை அளவு நிர்ணயிக்கப் பட்டிருக்கிறதா ? அப்படி நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அது திருப்திகரமாக இருக்கிறதா ? எவ்வளவு ஏக்கர்கள் இதனால் பலன் அடையும் என்று தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் கேட்கும் விவரம் என்னிடத்தில் இல்லை. 6 மைல் குடைந்தாலும், அதிகப்படியான தொகை செலவழித்தாலும், நன்மை இல்லை, மிக சொற்பமான நன்மை மட்டும் ஏற்படுவதால், இது கைவிடப்பட்டிருக்கிறது.